8 பக்கம் 2 ரூபாய்

1 TAMIL DAILY FROM MUMBAI

மும்பை தமிழ் டைம்ஸ்

MUMBAI TAMIL TIMES

தமிழ் 8 MH/BY NE/222/97 RNI No. 65866/96 ஞாயிற்றுக்கிழமை 14.3.2004 பங்குனி 1 சுபானு ஆண்டு ஹிஜிரி 1425 மொஹரம் 22 டைம்ஸ் 202

மும்பை, ஞாயிற்றுக்கிழமை 14 மார்ச் 2004

# ஆன்மீக டைம்ஸ்...

## ஸத்குரு ஸ்ரீ ஸேஷாத்ரி ஸ்வாமிகள்

இந்த பிரபஞ்சத்திலே பல முதன்மைகளைத் தன்பால் கொண்ட கோயிலாகத் திகழ்வது சென்னை மாடம்பாக்கத்தில் உள்ள பதினெண் சித்தர்களுடன் கூடிய ஸ்ரீ சக்தி பீட பிருந்தாவனம் ஆகும்.




இந்த சக்திபீடம் உருவாக முழு முதல் காரணமானவர் சென்னையைச் சேர்ந்த ஸ்ரீவித்யா உபாசகரும், ஜோதிட வல்லுனரும், ஸத்குரு ஸ்ரீ ஸேஷாத்ரி ஸ்வாமிகளின் பிரதம சிஷ்யரும், ஸத்குரு ஸேஷாத்ரி ஸ்வாமிகள் அறக்கட்டளையின் சேர்மனுமான குருஜிஸ்ரீ கே.வி.எல்.என்.சர்மாஜி அவர்கள் ஆவார். பதினைந்து வருடங்களுக்கு முன்னார், ஒருநாள் அவரின் கனவில் வந்த ஸேஷாத்ரி ஸ்வாமிகள், "ஒரு குறிப்பிட்ட இடத்தில் பராசக்தியின் மொத்த சொரூபமும் இடம்பெறும்படி கோவில் கட்ட வேண்டும். அதற்கான இடம் இப்படி தான் இருக்கும்'' என்று அந்த இடத்தைப்பற்றிய குறிப்புகளைச் சொல்லிவிட்டு மறைந்தார்.

அந்த இடம் அரசுக்கு சொந்தமான நிலம் என்று தெரிந்து, அரசை முறையாக அணுகி, உரிய பணம் செலுத்தி அந்த 2.3 ஏக்கர் பரப்பளவு உள்ள இடத்தை வாங்கினார்கள். ஸேஷாத்ரி ஸ்வாமிகள் மூலம் கனவில் காட்டிய வழிகாட்டலின்படி தற்போது இந்த இடத்தில் பிரமாண்டமான கோயில் அமையப்பெற்று வருகிறது. இந்த கட்டுமானப் பணிகள், சத்குரு ஸ்ரீ ஸேஷாத்ரி ஸ்வாமிகள் பிருந்தாவனம் டிரஸ்டின் சார்பில், ரூ.5 கோடி செலவில் ஸ்ரீ சக்ர மஹாமேருவை மையமாகக் கொண்டு, அவளின் இரு கரங்களாக, வலதுபுறம் ஸேஷாத்ரி ஸ்வாமிகளின் சன்னதியும், இடதுபுறம் குருவாயூர் கிருஷ்ணனின் சன்னதியும் அமைக்கப்பட்டு வருகிறது.

ஸ்ரீ சக்ரமஹாமேரு எப்பேர்பட்ட தனித்தன்மை வாய்ந்தது என்று இந்த இடத்தில் குறிப்பிட்டே ஆக வேண்டும். மஹான் ஸ்ரீ ஸேஷாத்ரி ஸ்வாமிகளின் ஆஞ்சைபடி, இந்த மஹாமேருவை செதுக்குவதற்கு வேண்டிய பச்சைக் கல்லை, கர்நாடகாவில் உள்ள 'ஹளன்' என்ற இடத்திலிருந்து வரவழைத்து, ஒரே கல்லில், இதுவரை எங்குமே அமைக்கப்படாத முறையில் மிக்கமேன்மை வாய்ந்த ஸ்ரீ வித்யா தத்துவ முறைப்படி உருவாக்கப்பட்டுள்ளது. எங்குமே இல்லாத முறையில் மஹாமேரு கூர்மபீடத்தில் அமர்ந்திருப்பது இதன் தனிப்பட்ட சிறப்பம்சம் ஆகும். இந்த சக்திபீடம், சன்மார்க்க நெறிப்படி அமைக்கப்பட்டுள்ளது. சாதி, இன, மொழி வேறுபாடின்றி உருவாகிவரும் இந்த கோயிலில் வழிபடுவதற்கு யாருக்கும் எந்தவித கட்டுப்பாடும் கிடையாது. எல்லோரும் இங்கு வந்து வழிபடலாம்.

ஸத்குரு ஸ்ரீ ஸேஷாத்ரி ஸ்வாமிகள் டிரஸ்ட் சமுதாய பணிகளின் கீழ் ஏழைக்குழந்தைகளுக்கு இலவச பால் வழங்குதல், ஏழைக்குழந்தைகளின் படிப்பு செலவுகளை ஏற்பது, இலவச சட்ட ஆலோசனை வழங்குதல் முதலியவைகளை செவ்வனே செயல்படுத்திக் கொண்டு வருகிறது. முதியோர் இல்லம் மற்றும் தியான மண்டபம் ஆகியவை எதிர்கால திட்டமாக உருவாக உள்ளது. இந்த கோவில் திருப்பணிகள் முழுக்க, முழுக்க பக்தர்கள் வழங்கும் நிதியுதவியுடன் நடந்து வருகிறது. திருப்பணிக்கு நிதி வழங்க விரும்புபவர்கள் "ஸத்குரு ஸ்ரீஸேஷாத்ரி ஸ்வாமிகள் பிருந்தாவனம் டிரஸ்ட்" என்ற பெயரில் 'டிமாண்ட் டிராப்ட்' எடுத்து எங்களது பம்பாய் முகவரிக்கோ அல்லது சென்னை முகவரிக்கோ அனுப்பி 80 -G வருமான வரி விலக்கும் பெற்றுக்கொள்ளலாம்.

ஸ்ரீ கிரகலக்ஷ்மி போட்டோ இங்கு கிடைக்கிறது. இப்படத்தை பூஜை அறையில் வைத்து பூஜித்தால் கடன் தொல்லை, வியாபாரத்தில் லக்ஷ்மி கடாட்சம் பொங்கும், திருமணம் நடக்கும், கணவன் மனைவி ஒற்றுமை பெருகும், குழந்தை பாக்கியம் கிடைக்கும். ஸ்ரீகிரக லக்ஷ்மி படம் வேண்டுபவர்கள் 28326579 என்ற எண்ணில் தொடர்பு கொள்ளவும். இந்த பிரபஞ்சத்திலேயே முதன்முறையாக பல முதன்மைகளை தன்னிடத்தே வைத்திருக்கும் இந்த கோவிலின் கும்பாபிஷேகம் வருகிற மே 30-ம் தேதி 2004 அன்று ஸத்குரு ஸ்ரீ ஸேஷாத்ரி ஸ்வாமிகளின் அருளாசியுடன் மிக மிக விமர்சையாக நடக்க உள்ளது.

அதில் நீங்கள் ஒவ்வொருவரும் கலந்து கொண்டு மகானின் அருளுக்கும், அம்பிகையின் அருளுக்கும் பாத்திரமாகும்படி கேட்டுக் கொள்கிறோம்.